பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

செப்டம்பர் 2013 ❁ விலை ரூ. 15/-



# பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் பாடினால் திருச்செந்தூர் முருகன் வந்து அருள்புரியும் அதிசயம்

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளியுள்ள ஆறு மண்டல அரும்பெரும் நூல்களுள் நான்காவது மண்டலத்தைச் சார்ந்த சிறுநூல் திரட்டு என்னும் தொகுப்புப் பனுவலில் சண்முக கவசத்தை அடுத்து அமைந்திருப்பது ‘‘பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்” என்பது. பரிபூஜனம் என்பதற்கு நிறைவான அல்லது முழுமையான வழிபாடு என்பது இதன் பொருள் ஆகும். பஞ்சாமிர்தம் என்பது ஐந்து திரவியங்கள் சேர்ந்தது ஆகும். இதில் சுவாமிகள் தேர்ந்து எடுத்த திரவியங்கள் பால்,தயிர், நெய், சருக்கரை, தேன் என்னும் ஐவகை அமுதமயமான பொருள்கள். வண்ணம்–குழிப்பு நடையில் அமைந்து ஓசை வளமும் சந்த நயமும் கொண்டு விளங்கும் பாட்டு வகை. “முருகப் பெருமானின் நிறைவான – முழுமையான – வழிபாட்டுக்கு உரியதான, அபிஷேகத்துக்கு உரிய ஐவகை அமுதப் பொருள்களாய் அமைந்து சந்த நயம் சிறக்கப் பெற்று விளங்கும் வண்ணப்பாட்டு” – இதுவே பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் என்பதன் பொருள்.

இறைவனுக்குரிய அபிஷேகத் திரவியங்களுள் பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம் என்னும் இரண்டும் மிக மிக முக்கியமானவை. இவற்றுள் பஞ்சகவ்யம் என்பது ஆலயம், ஆலயத்தைச் சார்ந்துள்ள சுற்றுப்புறச் சூழல்கள் ஆகியவற்றுக்குத் தூய்மையையும் பொலிவையும் கொடுக்க வல்லது. பஞ்சாமிர்தம், கிராம அல்லது நகர மக்களுக்குப் புஷ்டிகளையும் நற்பேறுகளையும் கொடுக்கக் கூடியது.

பத்து வகைப்பட்ட புஷ்டிகள் மக்களுக்குத் தேவை (புஷ்டி – வளமை) சொல்வளம், ஞானவளம், இந்திரிய வளம், செல்வ வளம், தானிய வளம், மக்கட்பேற்று வளம், பசு முதலான கால்நடை வளம், கிராம வளம், தரும வளம், அணிமா முதலான பேறுகளின் வளம் ஆகிவையே பத்து வகைப்பட்ட புஷ்டிகள் ஆகும். இத்தகைய புஷ்டிகளுக்கெல்லாம் தலைவனாக விளங்கி, இவற்றை அடியார் பெருமக்களுக்கு வழங்கி அருள்புரிபவன் சிவபெருமான் (முருகப்பெருமான்) என்பதால் ஸ்ரீ ருத்ரம் அவனை “புஷ்டானாம் பதயே நம” என்று போற்றுகிறது. இந்த வளங்களை எவ்வாறு அவன் அருள்கிறான் எனில் பஞ்சாமிர்த அபிஷேகம் வாயிலாக அருள்கிறான்.



பஞ்சாமிர்தம் இருவகைப்படும். ரஸ பஞ்சாமிர்தம் எனும் ஒன்று. பழப் பஞ்சாமிர்தம் என்பது மற்றொன்று, பால் தயிர், நெய், சர்க்கரை, தேன் என்னும் ஐம்பொருள்களைக் கொண்டு மந்திரபூர்வமாக அமைக்கப்படுவது ரஸ பஞ்சாமிர்தம். மேற்கூறிய ஐந்துடன் வாழை, பலா, மாம்பழம், சந்தனம் முதலான நறுமணப் பொருள்கள் கலந்துள்ள நீர் – ஆகியவற்றைச் சேர்த்து மந்திர பூர்வமாக அமைக்கப்படுவது பழப் பஞ்சாமிர்தம்.

குறிப்பிட்ட அளவுப்படி வரையப்பட்ட சதுர மண்டலத்தை வரைந்து, அதனை ஒன்பது சம பங்குகளாகப் பிரித்துக் கொண்டு, நடுக் கட்டத்தில் பால், கிழக்குக் கட்டத்தில் தயிர், தெற்குக் கட்டத்தில் நெய், வடக்குக் கட்டத்தில் தேன், மேற்குக் கட்டத்தில் சர்க்கரை என ஒவ்வொரு பாத்திரத்தில் வைத்து தத்துவ பாவனை, மந்திரம் ஜபம் என்பன முதலான கிரியைகளால் ரஸ பஞ்சாமிர்தம் என்பதை அமைக்க வேண்டும். பால் இருக்கும் கட்டம் பிருதிவி தத்துவத்தையும், தயிர் இருக்கும் கட்டம் ஜல தத்துவத்தையும், நெய் இருக்கும் கட்டம் அக்னி தத்துவத்தையும், சர்க்கரை இருக்கும் கட்டம் வாயு தத்துவத்தையும், தேன் இருக்கும் கட்டம் ஆகாச தத்துவத்தையும் குறிக்கும்.

இங்ஙனம் முறைப்படி அமைக்கப்பட்ட பஞ்சாமிர்தத்தால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் முன்னே கூறப்பட்ட பத்து வகை வளங்களும், அபிஷேகம் செய்விப்பவருக்கு மட்டுமன்றி, ஊர்வாழ் மக்கள் அனைவர்க்குமே அபரிமிதமாக வாய்க்கும் என சிவாகமங்கள் உறுதிப்படுத்துகின்றன.

தனித்தனியே பால், தயிர் முதலானவற்றால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் ஒவ்வொரு குறிப்பிட்ட

பயன் தனித்தனியே வாய்க்கும். பால் – ஆயுள் விருத்தி; தயிர் – நல்ல மக்கட்பேறு; நெய் – பிணிப்புகளிலிருந்து விடுதலை; சர்க்கரை – பகையை விலக்கி மேம்படுதல்; தேன் – சுகப்பேறும், வாக்கு வளமும், என தனித்தனியே பால் முதலான ஐம்பொருள்களால் அபிஷேகம் செய்தால் இத்தகைய பயன்கள் வாய்க்கும். இந்த ஐந்து பொருள்களையும் மேற்கூறிய முறைப்படி சதுர மண்டலத்தில் வைத்துப் பஞ்சாமிர்தத்தை உருவாக்கி அதனால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தால், ஆயுள் விருத்தி முதலான ஐந்து பேறுகளோடு, வாக்குவளம் முதலான பத்துவகை வளங்களும் உறுதியாக வாய்க்கும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஆகம வழிப்பட்ட அபிஷேகம் முதலான சீரிய செயல்களின் தனித்துவத்தையும் சிறப்பையும் சீர்மையையும் தெள்ளத் தெளிவாக உணர்ந்தவர் ஆதலின், முருகப் பெருமானைக் குறித்து மிகச் சிறப்பான முறையில் “பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்” என்னும் தன்னிகரற்ற வண்ணப்பா ஒன்றை உலக நன்மைக்காக அருளியுள்ளார்.

நம் குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் முருகனின் மீது 6666 பாடல்கள் பாடியருளியவர். சுவாமிகள் அருளிய பெருவேண்டுகோள் பதிகத்தில் 9ஆம் பாடலில் திருச்செந்திலாண்டவன் அருள் பாலித்த நிகழ்ச்சியைக் கூறுகிறார்கள். கீழ்வரும் பாடல் அடியார்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**“பரிவாளர்கள் அங்கு ஓது ஒரு பஞ்சாமிர்த வண்ணம்**
**இரியா எனது உளம் நச்சு இனிதாம் என்று ஒரு கிழமைப்**
**பெரியாண் முனம் வந்து ஓதிய செந்திற் பெருமானே**
**வரிமா மறை இறைவா எனை மறவேல் எனை மறவேல்!!”**



திருச்செந்தூர் அன்பர்கள் ஓதிய பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் அழிவற்ற என் உள்ளம் விரும்பும் இனிமையுடையது என்று உன் அடியவளாகிய முத்தம்மையார் (பெருமையுடைய கந்தரனுபூதியை அருளிய அருணகிரிநாத முனீந்திரரை ஈன்றெடுத்த பெருமாட்டியின் திருநாமம் முத்தம்மையாகும்) என்னும் மூதாட்டியின்பால் வந்து கூறியருளிய செந்தில் இறைவனே! ஒழுங்கும் பெருமையுமுடைய வேதங்களின் தலைவனே! எனை மறவேல்! எனை மறவேல்! அடியேனை மறந்து விடாமல் அருள்புரிக! என வேண்டுகிறார்.

(முற்காலத்தில் ஔவைப் பிராட்டியின் முன் மாடுமேய்க்கும் சிறுவனாகத் தோன்றி தெய்விக ஆருள் திருவிளையாடல் செய்ததைப் போலவே, பிற்காலத்தில் நம்முடைய குருநாதர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் இயற்றியருளிய, வண்ணக் குழிப்புடைப் பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் என்னும் ஐந்து திருச் செய்யுட்களின் மகிமையை உலகோர் அறிய, சீர் அலைவீசிச் செல்வம் கொழிக்கும் திருச்செந்தூரில் ஓர் இளைஞனாக உருவங்கொண்டு தமக்கு அந்நூலின் மீது உள்ள பிரீதியை வெளிப்படுத்தி அருளினான்)

முதன்மைத் தெய்வமாகிய முருகப் பெருமானே செந்திலம்பதியில் மூதாட்டி ஒருவர் முன்னால் தோன்றி “இவ்வண்ணம் எனக்குப் பிரீதியாக உள்ளது. இப்பாடல் எங்கெங்கே பாராயணம் செய்யப்படுமோ அங்கெல்லாம் யான் வருவேன்; இருப்பேன்......” எனத் திருவாய் மலர்ந்து கூறியுள்ளான் எனில், அமுதமயமான இந்த வண்ணப் பாடலின் சிறப்புகளை விவரித்துக் கூற வேண்டுமோ? ஒவ்வோர் அடியும் பதம் பரிக்கப்பட்டு இந்தப்பாடல் இப்பொழுது வெளியிடப்படுவது சிறப்புக்கு உரியது. இத்தகைய அரிய சக்தி வாய்ந்த பஞ்சாமிர்த வண்ணம் எனும் ஓசைவளம் மிகுந்த உயர்தனிப் பாடலை இங்கே காண்கிறோம். அடியார்களின் நலமும் வளமும் கருதி இப்பாடல் வேண்டும் அடியார்கள் இந்த மாதஇதழ் ஆசிரியரைத் தொடர்பு கொண்டால் அப்பாடல் இலவசமாக தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இப்பாடலை தாங்கள் செவி வழியாகக் கேட்க விரும்பும் அன்பர்கள் **www.pambanswamigal.org** என்ற இணைய தளத்தில் “சுவாமிகள் பாடல் கற்றுக் கொள்ள வேண்டுமா?” என்ற தலைப்பில் சென்று இந்தப் பாடலின் தலைப்பை ‘கிளிக்’ செய்தால் இன்புறக் கேட்டு மகிழலாம். மகிழ்வது மட்டும் அல்லாமல் திருச்செந்தில் முருகனையும் நம் மனத்தில் காணக்கூடிய ஓர் அதிசயமும் ஏற்படும்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**